நாள்: 12.02.2024
OS.41/2011
பெயர்: நஜீம்பானு
வா.சா.1

<u>குறுக்கு விசாரணை (7 முதல் 13, 18 முதல் 21, 25 வரையிலான பிரதிவாதிகள் தரப்பு)</u>

வழக்கு விபரங்கள் எனக்கு நேரடியாகத் தெரியும். பிராது மற்றும் இதர சொத்துக்களுக்கும் எனது மாமனார் C.A.M. முகமது இப்ராகிம் அவர்களால் 1946ம் ஆண்டு கிரையம் வாங்கப்பட்டது என்றால் சரிதான். எனது மாமனார் கிரையம் பெற்ற சொத்தில் அவர் வாழ்ந்த காலத்தில் அதன் மையப்பகுதியில் குடியிருப்பு பங்களா கட்டியும் இதர பகுதியில் காலியிடமாகவும் வைத்து வந்தார் என்றால் சரிதான். என் மாமனார் 22.05.1978ம் தேதி காலமாகிவிட்டார் என்றால் சரிதான். என் மாமனார் உயிருடன் இருக்கும்போது பங்களாவையும் இதர காலியிடங்களையும் 1978ம் ஆண்டு பிப்ரவரி மாதம் இஸ்லாமிய சட்டப்படி ஹிபா என்னும் வாய்மொழி தானமாக வாரிசுகளுக்கு கொடுத்தார் என்றால் சரிதான். அவ்வாறு தானம் கொடுத்த என் மாமனாரால் கட்டப்பட்ட பங்களாவை 5, 6 பிரதிவாதிகளுக்கு தானமாக கொடுத்து அன்றுமுதல் மேற்படி பங்களாவை சுவாதீனம் எடுத்து அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். பங்களாவைத் தவிர பாக்கி உள்ள காலியிடத்தில் தென்கிழக்கு மூலையில் 16 செண்டு காலியிடத்தை எனது கணவரான சம்சுதீன் அவர்கள் ஹிபா மூலம் தானம் கொடுத்தார் என்றால் சரிதான். அதன்பின் நானும் 2, 3 வாதிகளும் ஹிபா மூலம் கிடைத்த சொத்தை அனுபவித்து வருகிறோம் என்றால் சரிதான். அந்த இடம் காலி மனை என்பதால் வரிவிதிப்பு எதுவும் இல்லை என்றால் சரிதான். மேற்படி காலியிடத்தில் வடகிழக்கு மூலையில் 16 செண்டு காலியிடத்தை ஹிபா மூலம் எனது மாமனார் C.A.M.ஜகீர் அகமதுக்கு கொடுத்தார் என்றால் சரிதான். எனது மாமனாருக்கு 4 ஆண்மக்கள் 4 பெண்மக்கள் என்றால் சரிதான். 4 பெண்மக்களான சுரையாபேகம், ரபிகாபேகம், சலிமாபேகம், ரஜியாபேகம் ஆகியோர்களுக்கு தலா 8 செண்டு காலியிடத்தை ஹிபா மூலம் தானம் கொடுத்தார் என்றால் சரிதான். அவ்வாறு காலியிடமாக கொடுத்த சொத்தை 1978ம் ஆண்டு முதல் 13,14 பிரதிவாதிகளும் 7 முதல் 12 பிரதிவாதிகளும் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். 14ம் பிரதிவாதியான ரபிகாபேகம் அவருக்கு கிடைத்த நிலத்தில் வீடு கட்டி அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். சுரைகாபேகம் தென்மேற்கு மூலையில் 8 செண்டு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். ஜகீர்அகமது சென்னையில் வசித்து வருகிறார்

என்றால் சரிதான். ஹிபா கொடுத்த பிறகு சுரையாபேகத்திற்கும் ஜகீர்அகமதுக்கும் இடையே பரிவர்த்தனை செய்து கொண்ட விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். அதனடிப்படையில் சுரையாபேகத்திற்கு ஒதுக்கப்பட்ட 8 செண்டை ஜகீர்அகமதுக்கு கொடுத்துவிட்டு அதற்கு பதிலாக மேற்படி ஜகீர்அகமதுக்கு வடகிழக்கு மூலையில் ஒதுக்கப்பட்ட 16 செண்டில் 8 செண்டை சுரையாபேகம் பெற்றுக்கொண்டு அந்த இடத்தில் வீடு கட்டி அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரிதான். மேற்படி சுரையாபேகம் வீட்டிற்கு பின்புரம் உள்ள 8 செண்டும், ஏற்கனவே சுரையாபேகத்திற்கு ஒதுக்கப்பட்ட 8 செண்டும் ஆகமொத்தம் 16 செண்டு ஜகீர்அகமது அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். அதன்படி ஜகீர்அகமது காலமான பின்பு 1 முதல் 3 பிரதிவாதிகள் இஸ்லாமிய வாரிசுச்சட்டப்படி கிடைக்கப்பெற்று அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரிதான். மொத்த சொத்துக்கும் தென்புரம் கிழமேலாக ஒரு பாதை உள்ளது என்றால் சரிதான். அதேபோல் வடபுரமும் கிழமேலாக ஒரு பாதை உள்ளது என்றால் சரிதான். நான் பெங்களுரில் குடியிருந்து வருவதை பயன்படுத்திக்கொண்டு 1 முதல் 3 பிரதிவாதிகள் எனக்கு பாத்தியப்பட்ட சொத்தை 4ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்யப்போவதை 6ம் பிரதிவாதி எனக்கு தகவல் கொடுத்தார் என்றால் சரிதான். 6ம் பிரதிவாதி கம்பம் சார்பதிவாளர் அலுவலகத்தில் 15ம் பிரதிவாதி ஆட்சேபனை மனு கொடுத்துள்ளார் என்றால் சரிதான். 6ம் பிரதிவாதி கொடுத்த ஆட்சேபனை மனுவை நிராகரித்துவிட்டார் என்றால் சரிதான். மேற்படி விபரத்தை 6ம் பிரதிவாதி என்னிடம் தொலைபேசி மூலமாக சொன்னார். அதன்பிறகு 2ம் வாதி 4ம் பிரதிவாதியிடம் ஆட்சேபனை செய்ததில் 4ம் பிரதிவாதி பொருட்படுத்தாமல் கட்டிடம் கட்டி வந்தார் என்றால் சரிதான். ஆகையால் செயலுறுத்துக்கட்டளை மற்றும் சுவாதீனப் பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன்.